10-2-1983 (வியாழக்கிழமை)	காலை—தனியார் அலுவல்கள் மாலை—அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறை வற்றலும்
11-2-1983 (வெள்ளிக்கிழமை) 12-2-1983 (சனிக்கிழமை)	அரசினர் சட்ட முன் வடிவுகள். ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

பேரவை வழக்கம் போல் காலை 9.00 மணிக்குக் கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 5-2-1983 காலை 9.00 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர் பேரவைபிற்பகல் 1.29 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

132. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 18.10.1982 ஆம் தேதியிடப்பட்ட உள்துறையின் 2590-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

133. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட முறைப் படுத்துதல் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 27.9.1982-ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 2474-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் (9) 1955/10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

134. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1981-ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 1/1951) 619-அ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பற்றது]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

17. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் 1981-82 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் விவாதத்தைத் தொடங்கி வைத்து மின்துறை அமைச்சர் மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் திருத்திய உரை (தமிழ்) ஆங்கிலம்)